**தலைப்பு 166 – நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 166 – நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 10 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வினதும், கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 34,731.40 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 26,577.15 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 8,154.25 மில்லியன் அதாவது 23.48 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 171.16 | 166.95 | 4.21 | 2.46 |
| மூலதனம் | 34,560.24 | 26,410.20 | 8,150.04 | 23.58 |
| மொத்தம் | **34,731.40** | **26,577.15** | **8,154.25** | **23.48** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்

அமைச்சிற்குரிய 16601 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 6.00 | 5.84 | 3.50 | 4.00 | 19.00 | 13.91 |

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் கீழான 03 பொது வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5.73 மில்லியன் கூட்டுமொத்தமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0002/0146/000 | 0.37 |
| 6000/0000/00/0013/0101/000 | 1.34 |
| 6000/0000/00/0016/0092/000 | 4.02 |
| **மொத்தம்** | **5.73** |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

அமைச்சினால் பின்வரும் சில பதிவேடுகளைப் பேணாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்பட்டிருக்கவில்லை எனக் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேட்டு வகை | தொடர்புடைய பிரமாணம் |
|---|---|---|
| (i) | இழப்பு தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 |
| (ii) | நிலையான சொத்துப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 502(2) மற்றும் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை |

### 3.2 காணாமல் போன உறுதிச்சீட்டுக்கள்

மீளாய்வாண்டிற்குரிய ரூபா 20,231 ஆன கொடுப்பனவு உறுதிச்சீட்டொன்று காணாமல் போயிருந்தது. அக்காணாமல் போன உறுதிச்சீட்டு தொடர்பில் ஒதுக்கீட்டுக் கணக்கில் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 04 செயற்திட்டங்களுக்குரிய 08 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 159.7 மில்லியனான மொத்த தேறிய நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 12 செலவின விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததன் காரணமாக நிதிஏற்பாடுகளைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அவ்விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாடுகளில் 26 சதவீதத்திலிருந்து 90 சதவீதம் வரையான வீச்சளவினைக் கொண்டிருந்தன.

(இ) நீர் வழங்கல் பிரிவின் சமுக வசதிகள் செயற்திட்டத்தின் கீழ் வரும் 09 செயற்திட்டங்களுக்குரிய குறை நிரப்பு மதிப்பீடு ஒதுக்கீட்டின் மூலம் ரூபா 2,729.9 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின்

இறுதிவரை அந்நிதி ஏற்பாட்டில் பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 1,860.9 மில்லியன் அதாவது ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் 68 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேவையான அளவினை விட கூடுதலான குறைநிரப்பு ஒதுக்கீட்டின் மூலம் நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

**3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

2005 திசெம்பர் 10 ஆந் திகதி முதல் வேலை இடைநிறுத்ததிற்கு உட்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து ரூபா 38,095 தொகையான நிலுவை கடன் மீதி தொடர்ச்சியாக முன்கொண்டு வரப்பட்டு காணப்பட்டதுடன் அந்த ஊழியர் 2013 யூன் 07 ஆந் திகதி சேவையிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். மேலும் 2017 ஆகஸ்ட் 11 ஆந் திகதிய 2/1/2015/09 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அமைச்சின் செயலாளர் அனுப்பிய பதில் கடிதத்தின் பிரகாரம் அக்கடன் மீதியை பிணையாளர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்த போதில் 2017 செப்தம்பர் 30 ஆந் திகதி வரையிலும் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையொன்றும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.5.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வறிக்கை 2016 யூலை 31 ஆந் திகதி வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பான மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2016 மார்ச் 31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2017 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் அவ்வறிக்கை 2017 மே 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சிற்கு உரித்தில்லாத 11 அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான 16 வாகனங்கள் முறையாக கையேற்கப்படாமல் அமைச்சினால் பயன்படுத்தப்பட்டிருந்தன.

(ii) அமைச்சிற்குரிய தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாமைப்பு சபைக்குச் சொந்தமான 11 வாகனங்கள் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தன. 2016 ஆகஸ்ட் 04 ஆந் திகதி

அவ்வாகனங்களில் ஒரு வாகனம் மீள கையளிக்கப்பட்டிருந்ததுடன் மற்றுமொரு வாகனம் 2016 செப்தம்பர் 06 ஆந் திகதி திருத்த வேலைகளுக்காக முகவர் நிறுவனமொன்றிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் திருத்த முடியாத நிலைமையில் இருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாகனத்திற்காக 2016 ஆம் ஆண்டின் போது சபையினால் ரூபா 1,666,150 செலவிடப்பட்டிருந்தத.

**(இ) ஏனைய தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொண்ட மனித வளங்கள்**

2016 ஆம் ஆண்டின் போது தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாமைப்பு சபையில் சேவைலீடுபட்டிருந்த உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர் 43 பேர் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். 1995 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த 43 ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு இடையே 39 பேருக்குரிய கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட விபரங்களின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் போது சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 30,393,767 மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்குமான பங்களிப்பு ரூபா 3,129,687 தொகை தேசிய நீர் வழங்கிய மற்றும் நீர் வடிகாலமைப்பு சபையினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை |
|---|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | |
| (i) நிதிப் பிரமாணம் 371 | | 06 சந்தர்ப்பங்களில் செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்டிருந்த செயல் நிமிர்த்த கட்டுநிதி குறித்த செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட உடனேயே அக் கட்டுநிதி தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 1646 | - | வாகனங்களுக்குரிய நாளாந்த ஓட்டப் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கை**

2010 மே 14 ஆந் திகதிய CA/1/17/2010 ஆம் இலக்க கடிதத்தின்

| | |
|---|---|
| (i) 3 ஆம் பந்தி | அமைச்சரின் பயன்பாட்டிற்காகவும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ள முறை ஆகக் கூடிய உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை 03 ஆக இருக்க வேண்டிய போதிலும் அமைச்சினால் அதற்காக 05 வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. |
| (ii) 3.4 ஆம் பந்தி | அமைச்சரின் பிரத்தியேக செயலாளருக்கும் ஊடக செயலாளருக்கும் ஒரு வாகனம் வீதம் பயன்படுத்த உரித்து இருந்த போதிலும் 2 வாகனங்கள் வீதம் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தன. |

**(இ) பொது நிர்வாக சுற்றறிக்கை**

| | | |
|---|---|---|
| 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை 2.11 ஆம் பந்தி | - | அமைச்சிற்குரிய வாகனங்களின் எரிபொருள் எரிவு தொடர்பான பரிசோதனை 06 மாதங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |

## 3.8 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டம்

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் வெளிநாட்டு நிதியீட்டத்தின் கீழ் 17 தொடர் வேலை செயற்திட்டங்களை செயற்படுத்துவுதற்காக ரூபா 25,000 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தன. அச்செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 22,548.73 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த வெளிநாட்டு செயற்திட்டங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் செயலாற்றல்**

கீழே விபரிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள் தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிச் செயலாற்றல் மற்றும் பௌதீக செயலாற்றல் பின்வருமாறு

| செயற்திட்டங்கள் | செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட திகதி | நிதிச் செயலாற்றல் சதவீதம் | பௌதீக செயலாற்றல் சதவீதம் |
|---|---|---|---|
| யாழ்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் ஆரோக்கிய சுகநலன் செயற்திட்டம். | 2020.05.14 | 17 | 38 |
| உலர் வலய நகர நீர் மற்றும் ஆரோக்கிய சுகநலன் செயற்திட்டம் | 2017.12.31 | 65.5 | 85.8 |
| பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ மேம்படுத்தல் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 01 | 2016.12.31 | 36.25 | 24.07 |
| பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ மேம்படுத்தல் முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - செயற்திட்டம் 02 – ஆசிய அபிவிருத்தி வங்கி | 2019.06.30 | 8.41 | 3.66 |
| பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ மேம்படுத்தல் முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - செயற்திட்டம் 02 – AFD (அம்பத்தலே மின்சக்தி பாதுகாப்பு செயற்திட்டம்) | 2019.12.31 | 4.36 | 3.32 |

**3.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சின் மின்சாரக் கட்டணத்தை உரிய திகதிக்கு முன்னர் கொடுப்பனவு செய்யாமையால் ரூபா 21,493 தொகையான தாமதக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தன.

## 3.10 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 27 | 22 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 02 | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 81 | 56 | 25 |
| (iv) | ஆரம்ப நிலை | 40 | 34 | 06 |
| | **மொத்தம்** | **153** | **114** | **39** |